**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.**

**STC.No. 528 /2023**

PW-1

2024-ம் ஆண்டு ஜீன் மாதம் 14-ம் நாள் வெள்ளிக் கிழமை புகார்தாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 14.06.2024 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எ.பிரவின்குமார் பி.ஏ., பி.எல். அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தாணுமாலையப்பெருமாள் | **ஜாதி** | |
| **தந்தை பெயர்** | சேத்திரபாலன் | **தொழில்** | என்.எல்.சி. ஊழியர் ஓய்வு |
| **கிராமம்** | நெய்வேலி | **சமயம்** | |
| **தாலுக்கா** | குறிஞ்சிப்பாடி | **வயது** | 66 |

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

1) என்னுடைய புகாரிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் எதிரி எனக்கு பழக்கமானவர் என்று கூறியுள்ளேன் அவர் எவ்வாறு பழக்கம் என்றால் நான் நாகர்கோயில் அவர் தூத்துக்குடி அதனால் எனக்கு பழக்கம். எதிரி எனக்கு இந்த பரிவர்த்தனைக்கு முன்பு 1 - 1/4 வருடங்களாக பழக்கம். 2022 ம் ஆண்டு கடலூர் பழைய OT காவல் நிலையம் அருகில் நான் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது எதிரி எனக்கு பழக்கமானார். அப்போதுதான் நான் முதலில் எதிரியிடம் பேசினேன். அவரும் என்னிடம் முதல்முறை பேசினார். அதற்கு முன்பு எங்கள் இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லை.

2) 03.03.2023 ம் ஆண்டு எதிரி என்னிடம் பணம் கேட்டார். நான் 03.03.2023 அன்று கடலூர் O.T யிலிருந்து NT செல்லும் வழியில் உள்ள துணிக்கடையில் இருந்து நான் வெளியில் வந்தேன் அப்போது எதிரி அந்த வாசலில் நின்றிருந்தார்

அப்போது என்னை பார்த்து கடன் கேட்டார். அப்போது எதிரியுடன் வேறு நபர்கள் இருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தனியாகத்தான் சென்றேன். துணிக்கடை வாசலில் வைத்துதான் எதிரி ரூ.6 லட்சம் பணம் வேண்டும் என்று கேட்டார் என்றால் அந்த இடம்தான் ஆனால் அவர் என்னிடம் ரூ.11 லட்சம் பணம் கேட்டார்.

3) எதிரி என்னிடம் ரூ.11 லட்சம் கேட்டார் என்று என்னுடைய அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறினேனா என்றால் இல்லை. 03.03.2023 அன்று எதிரி என்னிடம் துணிக்கடை வாசலில் வைத்து பணம் கேட்டார் என்ற விவரத்தை அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். 03.03.2023 பணம் கேட்டப்போது நான் என்ன சொன்னேன் என்றால் 05.03.2023 அன்று நெய்வேலிக்கு வந்து தருவதாக கூறினேன். 05.03.2023 அன்று மாலை 6.00 முதல் 6.30 மணிக்கு எதிரி என் வீட்டிற்கு வந்தார். எதிரியின் வீட்டு விலாசம் 2/1, பாலகிருஷ்ணா தெரு, சாலக்கடை, கடலூர் ஆகும்.

4) எதிரி வீட்டிற்கு கடன் கொடுத்தப்பிறகு சென்றுள்ளேன். எனக்கு திசைகள் தெரியுமா என்றால் தெரியும். எதிரி வீடு கிழக்கு மேற்கு தெருவில் வடக்கு பார்த்தவாறு உள்ளது. 05.03.2023 அன்று ரூ.6 லட்சம் பணம் வங்கியிலிருந்து எடுத்தேனா என்றால் இல்லை அதை நானும் என் மனைவியும் எங்கள் வருமானத்திலிருந்து எடுத்து வைத்திருந்த பணம் ஆகும். வருமான சம்பளம் வங்கியின் மூலம்தான் வரும் என்றால் சரிதான். வங்கி கணக்கை எடுத்து பார்த்தால் அதற்கான ரூ.6 லட்சம் எடுத்தற்கான ஆதாரம் இருக்கும் என்றால் சரியல்ல.

7) இந்த வழக்கில் வழக்கு காசோலையில் எதிரியின் கையொப்பத்தை தவிர மற்ற வாகசகங்களும் (தேதி, தொகை, பெயர்) ஆகிய விவரங்கள் யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். மேற்படி நான் கூறும் பண பரிவர்த்தனைக்கு முன்பு எனக்கும் எதிரிக்கும் வேறு பண பரிவர்த்தனை இருந்ததா என்றால் இல்லை. இந்த ரூ.6 லட்சம் கடனுக்கு எதிரியிடமிருந்து வேறு ஆவணம் வாங்கினேனா என்றால் மொத்தம் ரூ.11 லட்சம் ஆகும். அதில் ரூ.20 லட்சத்திற்கு கடலூர் எல்லையில் உள்ள சொத்து பத்திரம் ஒன்று கொடுத்தார் அதன்பின் இரண்டு காசோலைகள் கொடுத்தார் அதில் ஒன்று இவர் பெயரிலும் மற்றொன்று எதிரியின் மனைவி பெயரிலும் கொடுத்தார். மேற்படி அவணங்களை மட்டுமே வாங்கினேன்.

8) எதிரியிடம் ரூ.6 லட்சம் கொடுத்துவிட்டு அவர் மனைவியிடம் காசோலை வாங்கவேண்டிய அவசியம் என்ன என்றால் கூடுதல் பாதுகாப்பிற்காக அந்த

காசோலை வாங்கினேன். எதிரியிடம் இருந்து வாங்கிய காசோலை ரூ.6 லட்சம் ஆகும் அவர் மனைவியிடம் வாங்கிய காசோலையானது ரூ. 5 லட்சத்திற்கு ஆகும். எதிரியிடம் ரூ.6 லட்சம் பணம் கொடுத்துவிட்டு மொத்தமாக எதிரி மற்றும் அவரது மனைவியிடம் இருந்து ரூ.11 லட்சத்திற்கு காசோலை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த சொத்து பத்திரம் மற்றும் 2 காசோலைகள் தற்போதுவரை என் வசம்தான் உள்ளது என்றால் சரிதான்.

9) இந்த வழக்கில் எதிரியின் மனைவி என்னிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கியுள்ளார் என்ற விவரத்தை அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எதிரிக்கும் எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நீதிமன்றத்தில் ஆஜரானபின்புதான் எதிரிக்கு என்னை தெரியும் என்றால் சரியல்ல. எதிரிக்கு என்னை முன் பின் தெரியாத காரணத்தினால் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவ்வாறு நான் கடன் கொடுத்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. கடலூர் O.T. இருசப்ப செட்டி தெருவை சேர்ந்த வினோதினி கணவர் பெயர்கோவிந்தராஜ் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. வினோதினிக்கு நான் மாமா முறை என்றால் சரியல்ல. வினோதினியின் கணவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது.

10) தற்போதிலிருந்து 5 வருடங்களுக்கு முன்பு எதிரி மேற்படி கோவிந்தராஜிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல. அந்த கடனுக்காக கோவிந்தராஜிடம் பூர்த்தி செய்யப்படாத எதிரியின் கையொப்பமிட்ட 2 காசோலைகள் எதிரியின் மனைவியின் பூர்த்தி செய்யப்படாத 5 காசோலைகள், பூர்த்தி செய்யப்படாத 2 புரோ நோட்டுகள் பாதுகாப்பிற்காக கோவிந்தராஜிடம் கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கடனில் ரூ4,50,000/- மும் திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் வட்டி ரூ.10 லட்சத்திற்கு மேல் கொடுத்துவிட்டார் என்றும் அசலில் ரூ.50 ஆயிரம் பாக்கி இருந்தது என்றும் அந்த ரூ.50 ஆயிரத்தை கொடுக்க சென்றபோது கோவிந்தராஜ் இறந்துவிட்டார் என்றும் அந்த பாக்கி ரூ.50 ஆயிரம் தொகையை அவரது மனைவியிடம் கொடுக்க எதிரி சென்றார் என்றும் அந்த சமயத்தில் வினோதினி அந்த பணத்தை வாங்கமாட்டேன் என்று மறுத்து ரூ.10 லட்சம் பணம் கொடுத்தால்தான் ஆவணங்களை திரும்ப கொடுப்பேன் என்று கூறிவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது.

11) அதில் ஒரு காசோலையை வைத்துதான் கடலூர் குற்றவியல் நடுவர்

நீதிமன்றம் II ல் எதிரி மற்றும் அவரது மனைவி மீது ரூ.15 லட்சத்திற்கு STC.263/2022 என்ற வழக்கு தாக்கல் செய்து தற்போது நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த காசோலை பாரத் ஸ்டேட் வங்கி, திருப்பாப்புளியூர் என்றும் அதன் காசோலை எண். 308756 என்றும் 27.01.2022 தேதியில் காசோலை வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. STC.529/2023 என்ற வழக்கில் கனம் நீதிமன்றத்தில் வைலட் பாப்பா மீது நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் திருப்பாப்புளியூர் பாரத ஸ்டேட் வங்கியின் காசோலை எண். 308767 என்று சொன்னால் சரிதான்.

12) வினோதியிடம் கொடுக்கப்பட்ட பூர்த்தி செய்யப்படாத காசோலைகளில் 2 காசோலைகளை எடுத்து இந்த வழக்குகளில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரி எந்த காலத்திலும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக எதிரி கடலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது நிலுவையில் உள்ளது என்றால் என்னை எந்த புகாரிலும் அழைத்து விசாரித்தது இல்லை. வினோதினி என்னிடம் காசோலை கொடுத்து இருவரும் ஜோடித்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) எதிரியோ எதிரியின் மனைவியோ என்னிடம் எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றும் வினோதி கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்எல்சி ஊழியர் என்பதால் நான் வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். எந்த வருடத்திலிருந்து கணக்கு செலுத்துகிறேன் என்றால் 2000 ல் சம்பள உயர்வு வந்ததிலிருந்து வருமான வரி செலுத்துகிறேன்.

14) எனது வருமான வரி கணக்கை பார்த்தால் எனது வரவு செலவு கணக்குகள் தெரியும் என்றால் தெரியும். ரூ.11 லட்சம் கடன் கொடுத்ததை எனது வருமான வரி கணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டவில்லை அது பிள்ளைகளின் நகைகளுக்காக எடுத்து வைத்த பணம் அதனால் அதை கணக்கில் காட்டவில்லை. நான் உண்மையில் கடன் கொடுக்கவில்லை என்றும் கொடுத்திருந்தால் அதை கணக்கில் காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>: இல்லை.**